Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 73/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW8 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | பழனிச்சாமி |
| Father's Name | – | மாரியப்பன் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 03rd September 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 02.01.2017 ம் தேதி காலை 7.15 மணிக்கு ஆழியார் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது, காளிமுத்து மகன் சம்பத்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகாரினை பெற்று நிலைய கு.எண்.2/2017 சட்டபிரிவுகள் 279, 304(A) இ.த.ச.வின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். மேற்படி முதல் தகவலறிக்கை **அசாஆ.5** ஆகும். பின்னர் வாதியின் புகாரை இணைத்து முதல் தகவலறிக்கையின் அசலை கனம் நீதித்துறை நடுவர் எண்.2, பொள்ளாச்சிக்கும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

பின்னர் வழக்கின் கோப்பை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு சமர்ப்பித்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரினை நான்தான் எழுதினேன் என்றால் சரிதான். புகார்தாரருக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். விபத்தினை ஏற்படுத்திய காரின் ஓட்டுநர் காயம்பட்ட நபரை அதே காரில் மருத்துவமனைக்கு கொண்டு சென்று முதலுதவி செய்த விவரத்தினை தெரிந்து கொண்டேன்.

சாலையை குறுக்காக கடக்கும்போதும்தான் விபத்து ஏற்பட்டதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்த நபரின் தவறினால்தான் விபத்து ஏற்பட்டுள்ளது என்றாலும், அதனால்தான அவருடைய மகன் எழுத்து பூர்வமான புகார் எதுவும் கொடுக்கவில்லையென்றாலும், நானாக நிரப்பி கையெழுத்திட்டு பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல.

புகார்தாரர் விபத்தில் இறந்தவரின் மகன் என்றால் சரிதான். புகார் கொடுக்கும்போது காரின் ஓட்டுநரும் காவல்நிலையத்தில் வந்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காயம்பட்டவரின் அஜாக்கிரதையால் விபத்து நடந்ததாக அந்த காரின் ஓட்டுநர் காவல்நிலையத்தில் ஆஜராகி கூறினார் என்றால் சரியல்ல.

முதல் தகவல் அறிக்கையில் காரின் ஓட்டுநர் பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லையென்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடன் ஆனைமலை காவல் ஆய்வாளருக்கு வழககு கோப்பினை பார்வைக்கு வைத்துவிட்டேன் என்றால் சரிதான். சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No.II,
Pollachi